ஸ்ரீ

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# வேதவேதாந்த புண்ட்ர விசார தீபம்.

ஸ்ரீ பெரும்பூதூர்
உ. வே. கோமடம் கண்ணன் சுவாமிகள் என்கிற
கிருஷ்ணமாசாரியாரவர்களால்
இயற்றபபட்டு,

ஸ்ரீ வைஷ்ணவ பாததூளியாய்
வாதிமத்தேபகண்டீரவரான
வானமாமலை வேதாந்தியவாகளால்

சென்னை:
மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்
பதிபபிககப்பட்டது.

1909.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

# வேதவேதாந்த புண்ட்ர விசார தீபம்.

ஸ்ரீ பெரும்பூதூர்

உ. வே. கோமடம் கண்ணன் சுவாமிகள் என்கிற

கிருஷ்ணமாசாரியாரவர்களால்

இயற்றப்பட்டு,

ஸ்ரீ வைஷ்ணவ பாததூளியாய்

வாதிமத்தேபகண்டீரவரான

N. வானமாமலை வேதாந்தியவர்களால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1909.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

# வேதவேதாந்த புண்ட்ர விசார தீபம்:

மங்களம்.

𑌨𑌮𑌃𑌪𑍍𑌰𑌣𑌵𑌶𑍋𑌭𑌿𑌤𑌂 𑌨𑌵𑌕𑌷𑌾𑌯𑌕𑌣𑍍𑌠𑌾𑌮𑍍𑌬𑌰𑌂 ।
𑌤𑍍𑌰𑌿𑌦𑌣𑍍𑌡𑌪𑌰𑌿𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌹𑌕𑌂 ।
𑌦𑌯𑌾𑌞𑍍𑌚𑌿𑌤𑌦𑍃𑌗𑌞𑍍𑌚𑌲𑌂 𑌦𑌳𑌿𑌤𑌵𑌾𑌦𑌿𑌵𑌾𑌗𑍍𑌵𑍈𑌭𑌵𑌂 ।
𑌶𑌮𑌾𑌦𑌿𑌗𑌣𑌸𑌾𑌗𑌰𑌂 𑌶𑌰𑌣𑌮𑍇𑌮𑌿 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌂 ॥

நமஃ ப்ரணவ சோபிதம் நவகஷாய கண்டாம்பரம்
த்ரிதண்ட பரிமண்டிதம் த்ரிவித தத்வ நிர்வாஹகம்
தயாஞ்சிதத்ருகஞ்சலம் தளிதவாதி வாக்வைபவம்
சமாதி குணசாகரம் சரணமேமி ராமாநுஜம்.

வேத வேதாந்த புண்டர விசாரம் என்று பெயர் பெற்று ஒருகுட்டிச் சுவடி அச்சில் வெளிவந் திருக்கிறது. அதில் அச்சுவடி ஆக்கியோர் வேதவேதாந்த புண்டரம் இன்னதென்று நிச்சயித்ததாக விருதூதி ஊர்த்வ புண்டரத்தைப் பரிகசித்து எழுதியுள்ளார். அதை வாசிக்க நமக்கு நகை யுண்டாகின்றது. அதில் ப்ரமாண விருத்தமாயும் ப்ரமாணங்களில் ஒன்று கூறியிருக்க அதை மறுத்தும் இன்னும் பலவாறுகவும் எழுதி யிருக்கிறது. அவற்றை நாம் இதில் விசாரித்து உண்மையை விளக்குவோம்.

அதில் 2-வது பக்கத்தில் யஜுர்வேத முக்திகோப நிஷத்தும், மகாவாக்ய ரத்னவளியும் உப நிஷத்து நூற்றெட்டேயென நிஷ்கரிஷை செய்துவிட்டன என்றும் இதற்குமேல் இல்லையென்றும் சொல்லி யிருக்கிறதாக எழுதி யிருக்கிறுர். இது சரியல்ல. அவ் விரண்டினுமே ருக்வேதம் 21 சாகை, யஜுர்வேதம் 109 சாகை, சாமவேதம் 1000 சாகை, அதர்வணம் 50 சாகை - ஒவ்வொரு சாகைக்கு ஒவ்வொரு உப நிஷத்து என்று சொல்லி யிருக்கிறது. அதாவது நாலு வேதங்களுக்கும் சாகை மொத்தம் 1180. ஆகையால் உப நிஷத்துக்களும் 1180 என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. “ஸ்டார் ஆப் இந்தியா” (Star of India) முத்திராசாலையில் ப்ரமஸ்ரீ. கோ. வெங்கட கிருஷ்ண சாஸ்திரி யாராலும்,

மூஞ்சூர் பட்டு இராமச்சந்திர சாஸ்திரியாராலும் சோதிக்கப்பட்டு கிரந்த எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கிற 108 உபநிஷத்துக்கள் அடங்கிய புஸ்தகத்தில் 782-வது பக்கத்தைப் பார்க்க.

𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌶𑌾𑌖𑌾𑌸𑍍𑌸𑍍𑌯𑍁𑌰𑍇𑌕𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌸𑌂𑌖𑍍𑌯𑌯𑌾 ।
𑌨𑌵𑌾𑌧𑌿𑌕𑌶𑌤𑌂 𑌶𑌾𑌖𑌾𑌯𑌜𑍁𑌷𑍋 𑌮𑌾𑌰𑍁𑌤𑌾𑌤𑍍𑌮𑌜 ।
𑌸𑌹𑌸𑍍𑌰𑌸𑌂𑌖𑍍𑌯𑌯𑌾 𑌜𑌾𑌤𑌾𑌃 𑌶𑌾𑌖𑌾𑌸𑍍𑌸𑌾𑌮𑍍𑌨𑌃 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ।
𑌅𑌥𑌰𑍍𑌵𑌣𑌸𑍍𑌯 𑌶𑌾𑌖𑌾𑌸𑍍𑌸𑍍𑌯𑍁𑌃 𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌦𑍍𑌭𑍇𑌦𑌤𑍋 𑌹𑌰𑍇 ।
𑌏𑌕𑍈𑌕𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌶𑌾𑌖𑌾𑌯𑌾 𑌏𑌕𑍈𑌕𑍋𑌪𑌨𑌿𑌷𑌨𑍍𑌮𑌤𑌾 ॥

ருக்வேதஸ்யது சாகாஸ்யுரேக விம்சதி சங்க்யயா
நவாதிக சதம் சாகாயஜுஷோ மாருதாத்மஜ
சஹஸ்ர சங்க்யயா ஜாதாஃ சாகாஸ்ஸாம்நஃ பரந்தப
அதர்வணஸ்ய சாகாஸ்யுஃ பஞ்சாசத்பே ததோஹரே
ஏகைகஸ்யாஸ்து சாகாயா ஏகைகோப நிஷந்மதா.

அதே புஸ்தகத்தில் 835-வது பக்கத்தில் இதே விஷயத்தை வாக்கியமாகச் சொல்லி யிருக்கிறது.

𑌤𑌤𑍍𑌰𑍈𑌕 𑌵𑌿𑌂𑌶𑌤𑌿 𑌶𑌾𑌖𑌾 𑌋𑌚𑌃 । 𑌨𑌵𑌾𑌧𑌿𑌕 𑌶𑌤𑌶𑌾𑌖𑌾 𑌯𑌜𑍁𑌷𑌃 । 𑌸𑌹𑌸𑍍𑌰 𑌶𑌾𑌖𑌾𑌸𑍍𑌸𑌾𑌮𑍍𑌨𑌃 । 𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌚𑍍𑌛𑌾𑌖𑌾 𑌅𑌥𑌰𑍍𑌵𑌣𑌸𑍍𑌯 । 𑌏𑌕𑍈𑌕𑌸𑍍𑌯𑌾𑌃 𑌶𑌾𑌖𑌾𑌯𑌾𑌃 𑌏𑌕𑍈𑌕𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍 । 𑌆𑌹𑌤𑍍𑌯 𑌅𑌶𑍀𑌤𑌿 𑌸𑌹𑌿𑌤 𑌶𑌤𑌾𑌧𑌿𑌕 𑌸𑌹𑌸𑍍𑌰 𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌕𑌾𑌃 𑌉𑌪𑌨𑌿𑌷𑌦𑌃 ॥

தத்ரைக விம்சதி (21) சாகாருசஃ நவாதிகசத (109) சாகா யஜுஷஃ ஸஹஸ்ர (1000) சாகாசாம்நஃ பஞ்சாசத் (50) சாகா அதர்வணஸ்ய. ஏகைகஸ்யாஃ சாகாயாஃ ஏகைகோப நிஷத். ஆஹத்ய அசிதி சஹித சதாதிக ஸஹஸ்ய சங்க்யாகாஃ(1180)உபநிஷதஃ

ஆகையால் உப நிஷத்துக்கள் 108 மாத்திரமல்ல 1180 என்பது விசதம். இவைகளுக்குமேல் வாக்கியங்களில் 108 உப நிஷத்துக்களை மாத்திரம் அநுமாருக்கு ஸ்ரீராமர் உபதேசித்ததாகச் சொல்லி யிருக்கிறது. மாண்டூக்ய உபநிஷத் ஒன்றுமே ப்ரம்மஜ்ஞானோற் பத்திக்குப் போதுமான தென்றும் அதில் ஜ்ஞானம் பிறக்காவிட்டால் தசோப நிஷத்துக்களை அப்யசிக்க வேண்டுமென்றும், அதிலும் ஜ்ஞானம் கிடைக்கா விட்டால் 32 உப நிஷத்துக்களை அப்யசிக்க வேண்டுமென்றும், அதிலும் கிடைக்காவிட்டால்

108 உப நிஷத்துக்களை அப்யசிக்க வேண்டுமென்றும் அதே புஸ்தகத்தில் 783-ம் பக்கத்தில் சொல்லி யிருக்கிறது.

இனி இச்சுவடியில் திரிபுண்ட்ரத்திற்கு ஆதாரமாகச் சொல்லப்பட்ட உபநிஷத்துக்களிலெல்லாம் இப்புண்ட்ரவிஷயம் கூறியிருக்கிறதா என்பதைப் பார்ப்போம். இவைகளில் யஜுர்வேத ஜாபாலோபநிஷத்து ஒன்று என்று காட்டியிருக்கிறது. இந்த உபநிஷத்தில் திரிபுண்ட்ரத்தைப்பற்றியாவது பஸ்மத்தைப் பற்றியாவது ஒரு வார்த்தைகூட கிடையாது. முற்கூறிய அச்சுப் புஸ்தகத்தில் இந்த உபநிஷத்து 196, 197, 198-வது பக்கங்களில் அச்சிடப்பட்டிருக்கிறதைப் பார்க்க. மற்றொன்று யஜுர்வேத ஸ்வேதாஸ்வதரோப நிஷத்து. இது 198, முதல் 206-வது பக்கம் வரை அதே புஸ்தகத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதிலும் ஒன்றும் சொல்லப்படவில்லை. வேறொன்று ராமரகஸ்யோப நிஷத். இதை அதே புஸ்தகத்தில் 477-ம் பக்கமுதல் 488-ம் பக்கம்வரை அச்சிட்டிருக்கிறது, அதிலும் திரிபுண்ட்ரத்தைப் பற்றியாவது பஸ்மத்தைப் பற்றியாவது ஒன்றும் விதிக்கவில்லை. இன்னொன்று யஜுர்வேத தைத்திரியோப நிஷத். இதை அப்புஸ்தகத்தில் 44-வது பக்கம் முதல் 56-ம் பக்கம்வரை அச்சிட்டிருக்கிறது. இதில் திரி புண்ட்ரம் பஸ்மம் இவைகளின் பேச்சேயில்லை. மற்றொன்று அதர்வண வேத சாண்டில்யோப நிஷத். இது 505-ம் பக்கம் முதல் 518-ம் பக்கம்வரை அச்சிடப்பட் டிருக்கிறது. இதிலும் திரிபுண்ட்ர பஸ்மங்களுக்கு ஆதாரம் காணப்படவில்லை. காணப்படுகிற சில உப நிஷத்துக்கள் பாசுபத விரதத்தை அநுஷ்டித்து சிவ சாலோக்கியத்தைக் கோறினவர்களுக்கு பஸ்மதிரி புண்ட்ரதாரணத்தை விதித்திருக்கின்றன.

இதன்மேல் ஊர்த்வ புண்ட்ரத்தைப்பற்றி இச்சிறு சுவடியில் சொல்லியிருப்பதைப் பார்ப்போம். "ஊர்த்வ புண்ட்ரம் பவேத் ஸாம மத்யபுண்ட்ரம் யஜுஸ்ம்ருதம் அதஃபுண்ட்ரம் ருசஸ்ஸாக்ஷாத் தஸ்மாத் புண்ட்ரம் த்ரியாயுஷம்" என்ற சுலோகம் அதர்வண வேத ப்ருஹஜ்ஜாபாலோப நிஷத்தில் இருக்கிறதாகக் கூறியிருக்கிறது. இந்த உபநிஷத்துமேல் சொல்லிவரும் புஸ்தகத்தில் 253-ம் பக்கம் முதல் 265 - ம் பக்கம் வரை அச்சிடப்பட்டிருக்கிறது. அதில் இந்த சுலோகமில்லை. 259-ம் பக்கத்தில் 27-வது வரியில்,

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍𑌸𑌾𑌮 𑌮𑌧𑍍𑌯𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌯𑍁𑌷𑌂 ।
𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌯𑍁𑌷𑌾𑌣𑌿 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌲𑌲𑌾𑌟𑍇𑌚 𑌭𑍁𑌜𑌦𑍍𑌵𑌯𑍇 ॥

"ஊர்த்வபுண்ட்ரம் பவேத்ஸாம மத்யபுண்ட்ரம் த்ரியாயுஷம்
த்ரியாயுஷாணி குருதே லலாடேச புஜத்வயே"

என்ற சுலோகந்தான் காணப்படுகிறது. இதில் பூர்வ அர்த்தம் மாத்திரம் ஒன்றுயிருக்கிறது. அதாவது ஊர்த்வபுண்ட்ரம் சாம வேதம் என்று சொல்லியிக்கிறது. "ஊர்த்வபுண்ட்ரம் என்பது மேலேயிருக்கிற புண்டரம் என்று அருத்தம். அதாவது நெற்றியில் பஸ்மத்தினுல் குறுக்காகத் தரிக்கப்பட்ட மூன்றுரேகைகளில் மேலே யுள்ளது என்று அருத்தம். ஆகையால் வைஷ்ணவர்கள் நெடுக்காகத் தரிக்கிற புண்ட்ரத்திற்குப் பெயர் ஊர்த்வபுண்ட்ரம் அல்ல என்று இச்சுவடியில் குறித்திருக்கிறது. அது சரியல்ல. நெற்றியிலுள்ள மூன்று ரேகைகளில் "ஊர்த்வதேசத்தில்" அதாவது மேலிடத்திலுள்ளதை இதில் சொல்லியிருக்கிறது. இச்சுவடியில் 3-வது பக்கத்தில் "பஸ்மத்திரியக் புண்ட்ரத்தின் மேலே யுள்ள ஏகரேகை ஊர்த்வபுண்ட்ரம்" எனவும் 5 வரி தள்ளி "நெற்றியிலே குறுக்கே யொருகோடிமூக்கையே ஊர்த்வபுண்ட்ரமென ஏற்பட்டது" என்றும் சொல்லியிருக்கிறது. கீழ்ப்ரதேசத்தில் ஒரு ரேகை யிருந்தாலொழிய ஊர்த்வப்ரதேச ரேகை யேற்படாது. ஒரே ரேகைமாத்திரமிருந்தால் ஊர்த்வம் மத்யமம் அதமம் என்கிற வித்தியாசமுண்டாகாது. ஆகையால் மேல்சொல்லிய இரண்டு வாக்கியங்களும் ஒன்றேடொன்று விரோதிக்கின்றன. மேலும் ஒரே ரேகையைக் குறுக்காக நெற்றியிலிடும்படி சாஸ்திரம் ஒன்றுமில்லை. மேலும் நாம் கூறி வரும் புஸ்தகத்தில் நாரதப்ரிவ்ராஜகோப நிஷத்தில் 389-ம் பக்கத்தில் சந்நியாஸம் 6-வகையென்றுசொல்லி அதில் குடீசகனுக்கு சுவேதோர்த்வ புண்ட்ரமும் (வெளுத்த ஊர்த்வபுண்ட்ரம்) பஹூதகனுக்கு த்ரிபுண்ட்ரமும் ஹம்ஸனுக்கு திரிபுண்டராரம் அதன்மேல் ஊர்த்வ புண்ட்ரமும், பரமஹம்சனுக்கு பஸ்மோத்தூளனமும் விதித்திருக்கிறது. த்ரிபுண்ட்ரமும் ஊர்த்வபுண்ட்ரமும் வெவ்வேறில்லாவிடில் ஹம்சன் இரண்டும் தரிக்கிறது எப்படி? இரண்டும் வெவ்வேறு என்பது இதனுல் வெளியாகிறது. 399-ம் பக்கத்திலும் இவ்வித்தியாசம் தெரிகிறது. காலாக்நிருத்ரோப நிஷத்தில் (289-ம் பக்கத்தில் 7-வது வரியில்)

திர்யக்திஸ்ரோரேகாः ப்ரகுர்வீத வ்ருதமேதச்சாம்பவம்॥

திர்யக்திஸ்ரோரேகாஃ ப்ரகுர்வீத வ்ருதமேதச்சாம்பவம்

என்று சைவவிரதத்திற்கு அடையாளமாய் பஸ்மத்தால் குறுக்காக மூன்று ரேகைகள் நெற்றியில் தரிக்கவேண்டுமென்று விதித்திருக்கிறது. மூன்று ரேகைகளில் ஒன்று ஊர்த்வபுண்ட்ரமாகிவிட்டால் மற்றைய இரண்டும் எப்படித் திரியக் புண்ட்ரமாகும்? இனி "துரியாதீதா வதூதோபநிஷத்து அது கூறும் சந்நி

யாசிக்கு ஊர்த்துவபுண்ரம் கூடாதென மறுத்து" என இச்சுவடி 3-ம் பக்கத்தில் சொல்லியிருக்கிறது. நாம் எடுத்துக்காட்டி வரும் புஸ்தகத்தில் 581-வது பக்கத்தில் 13-வது வரியில் அவதூத சந்நியாசி

"[illegible]"

"க்ஷௌராப்யங்க ஸ்நானோர்த்வ புண்ட்ராதிகம் விஹாயஃ"

"க்ஷௌரம் எண்ணெய் ஸ்நானம் ஊர்த்வபுண்ட்ரம் முதலாகிய புண்ட்ரங்கள் இவைகளைவிட்டு" என்று சொல்லி அவன்கூடப்பிறந்த வடிவு தவிர மற்றொன்றும் கூடாதென்று முன்பின் வாக்கியங்களுடன் சேர்ந்து விதித்திருக்கிறதே தவிர ஊர்த்வ புண்ட்ரத்தை மாத்திரம் கூடாதென்று மறுக்கவில்லை. நாரதபரிவ்ராஜகோபநிஷத்தில் மேலே காட்டியபடி ஹம்சனுக்கு திரியக்புண்ட்ரமும் ஊர்த்வபுண்ட்ரமும் விதித்திருக்கிறது. சந்நியாசிகளில் மூன்றாவனான ஹம்சனுக்கு ஊர்த்வபுண்ட்ரமும் தரிக்கும்படி விதித்திருப்பதால் "சந்நியாசிகளில் தாழ்ந்தவனுக்கு இப்புண்ட்ரமாயது" என்று 4-வது பக்கத்தில் சொல்லியிருக்கிறது ப்ரமாணத்திற்குச் சேராது. சந்நியாசோபநிஷத்தில் 585-ம் பக்கத்திலும் மேல்சொன்னபடிதான் சொல்லியிருக்கிறது.

"கோபி சந்தனமென்பது கிருஷ்ணமூர்த்தி தமது லீலா காலத்தில் இடைப்பெண்களாகிய கோபிகா ஸ்திரீகளின் குசமண்டலங்களிலிருந்து தமது தேகத்திலொட்டிக் கொண்டதேயாம்" என்று 4-வது பக்கத்தில் சொல்லியிருக்கிறது. வாசுதேவோபநிஷத்தில் 500-வது பக்கத்தில் 3-வது வரிமுதல்

[illegible] ||

தம் ஹோவாச பகவான் வாசுதேவஃ வைகுண்ட ஸ்தாநாத் உத்பந்நம், மமப்ரீதிகரம், மத்பக்தைஃ ப்ரம்மாதிபிஃ தாரிதம். விஷ்ணு சந்தனம் மமாங்கே ப்ரதிதின மாலிப்தம் கோபிபிஃ ப்ரக்ஷாளநாத்கோபீ சந்தனம் ஆக்யாதம், மதங்கலே பனம் புண்யம். சக்ர தீர்த்தாந்த ஸ்திதம், சக்ரசமாயுக்தம் பீதவர்ணம் முக்தி ஸாதனம்

பவதி.'' நாரதனைப்பார்த்துப் பகவனுன வாசுதேவன் சொல்லுகிருன். வைகுண்டத்திலிருந்து உண்டானது. எனக்குப் பிரியமானது. என்னுடைய பக்தாளாகிய ப்ரம்மாதிகளாலே எனக்கு சமர்ப்பிக்கப்பட்ட விஷ்ணு சந்தனம் என்னுடைய சரீரத்தில் தினந்தோறும் பூசப்பட்டு கோபிகைகளால் அலம்பப்பட்டபடியால் கோபி சந்தனம் என்று சொல்லப்பட்டது. என்னுடைய சரீரத்தில் பூசப்பட்டபடியால் மிகவும் புண்ணியமானது. சக்ர தீர்த்தத்திலிருக்கிறது. சக்ரத்தோடு கூடியிருக்கிறது. மஞ்சள் நிறமாயிருக்கிறது. மோக்ஷசாதனமாயாகிறது'' என்று சொல்லியிருக்கிறது. ஆதலால் இச்சுவடியில் சொல்லியிருக்கிறது சரியன்று. வேதம் அனுதியாகையாலும் அதில் கோபி சந்தனம் சொல்லியிருப்பதாலும் "கிருஷ்ணமூர்த்தி யவதாரத்திற்கு முந்தி கோபி சந்தனமில்லையெனத் தெரிகிறது'' என்று சுவடியில் சொல்லியிருக்கிறது ப்ரமாண விரோதம்.

இனி, சித்திர புண்ட்ரத்தைப்பற்றி இச்சு வடியில் சொல்லியிருக்கிறதை ஆராய்வோம். "இந் நாமங்களைப்பற்றி வேதங்களிலாவது வேதாந்தமாகிய நூற்றெட்டு உபநிஷத்துக்களிலாவது ஒரு சுலோகமேனும், ஒரு வாக்கிய மேனும், ஒரு வார்த்தையேனும், ஒரு அட்சரமேனும் கிடையாது'' என்று 4-வது பக்கத்தில் எழுதி யிருக்கிறது. இதுவும் சரியல்ல. இச்சுவடி செய்தோர் ஒத்துக்கொள்ளுகிற 108-உபநிஷத்துக்களில் வராகோபநிஷத் ஒன்று. அதில் நாம் மேற் கூறிவரும் புஸ்தகத்தில் பூர்வ பாகம் மாத்திர முள்ளது. அதுஜ்ஞான பாகம். இதற்கு உத்தர பாகம் அநுஷ்டான பாகம். அதை யிப்புஸ்தகத்தில் அச்சிட வில்லை. மைசூர் மகாராஜ சமஸ்தான பண்டிதராகிய மே. நரசிம்ம சித்தாந்தியும் சீனிவாச ஜௌதிஷிகரும் தெலுங்கு எழுத்தில் அச்சிட்ட யஜுர்வேத ஆரண்யக புஸ்தகத்தில் காணலாம. இன்னும் அநேக உபநிஷத்துக்கள் அதில் அச்சிடப்பட் டிருக்கின்றன. அதில் 210-வது பக்கத்தில்

𑌶𑍍𑌰𑍀𑌵𑌰𑌾𑌹𑌰𑍂𑌪𑌿𑌣𑌂 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌃
𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛 । 𑌅𑌧𑍀𑌹𑌿 𑌭𑌗𑌵𑌨𑍍𑌨𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌵𑌿𑌧𑌿𑌂 । 𑌕𑌿𑌂 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂
𑌕𑌿𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌕𑌾𑌰𑍇𑌵𑌾𑌃 ॥

ஸ்ரீவராஹ ரூபிணம் பகவந்தம் ப்ரணம்ய ஸனத்குமார: பப்ரச்ச, அதீஹி பகவந் நூர்த்வ புண்ட்ர விதிம் கிம் த்ரவ்யம் கிம் ஸ்தாநம் காரேகா:.

என்று ஆரம்பித்து நாமத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. கல்கத்தாவில் பிரதாப சந்த்ரராயால் நாகர எழுத்தில் அச்சிடப்பட்ட

108 உபநிஷத் புத்தகத்திலும் இந்த உத்தர பாகத்தைக் காண லாம். ஆகையால் இந்த உத்தரபாகம் புதுமை யென்று இச்சுவடி யில் சொல்லியிருப்பதும் மற்றவைகளும் வெற்றுரைறையே. மேலும் பூர்வபாகத்தில் "பின்னிரண்டு ரிபுக்கு நிதாவர் சொன்னதாக வேற்படுகின்றன" என்று இச்சுவடியில் 6-வதுபக்கத்தில் சொல்லி யிருக்கிறது. ரிபு, நிதாவருக்குச் சொல்லுகிறாரே தவிர ரிபுக்கு நிதாவர் சொல்லவில்லை. நாம் கூறிவரும் புஸ்தகத்தில் 747, 750-வது பக்கங்களைப் பார்க்க. மேலும், மதுருமல்லி நரசிம்ம சாஸ் திரிகளால் செய்யப்பட்டு 1864-ம் வருஷத்தில் வாவிள்ள இராம சாமி சாஸ்திரிகளால் அச்சிடப்பட்ட புண்ட்ர நிர்ணய சந்திரிகை என்கிற புஸ்தகத்தில் 15-ம் பக்கத்தில் 17-வரிமுதல் வராகோப நிஷத்தின் உத்தரபாகத்தை ப்ரமாணமாக எடுத்து உதகரித்திருக் கிறது. அதிலே 16-வது பக்கத்தில் 9-வது வரி முதல் காத்தியா யன உபநிஷத்தில் சொல்லியிருக்கிற ஊர்த்வ புண்ட்ர ப்ரமாண பாகத்தை வியக்தமாய் எடுத்து உதகரித்திருக்கிறது. இப்புத்தகம் சமஸ்க்ருத பண்டிதர் ஒருவரால் செய்யப்பட்டது. இது 45-வரு ஷங்களுக்குமுன் அச்சிடப்பட்டது. இக்குட்டிச்சுவடி யாக்கியோர் இல்லையென மறுக்கும் உபநிஷத்துக்கள் இப்புத்தகத்தில் எடுத் தாளப்பட்டிருக்கின்றன. ஆகையால் இவ்வுபநிஷத்துக்களை இல்லை யென மறுத்தல் இச்சுவடி யாக்கியோருக்குத் தகுமே தவிர ஆஸ் திகர் ஒருவரும் ஒத்துக்கொள்ளத் தக்கதல்ல. ஊர்த்வ புண்ட்ரத் தைப்பற்றி விரிவாக இந்தப் புண்ட்ர நிர்ணய சந்திரிகையில் சொல்லியிருக்கிறதைப் பார்க்க. சச்சரித்ர ரட்சை, வடகலை குரு வாகிய தேசிகர் செய்த கிரந்தமாதலால் அதை வடகலையார் கண்டித்ததாகச் சொல்லுவது ஒத்துக்கொள்ளத் தக்கதல்ல.

மேலும், இச்சுவடி யெழுதியோர் உபநிஷத்துக்கள் 108 என்று வரையறுத்து விட்டதாகச் சொன்னார். 1180 உபநிஷத் துக்கள் உள்ளன என முன்னே காட்டப்பட்டது. உபநிஷத்துக் களுக்கு உத்தரபாக மிருக்கின்றன. இவர் பார்த்திருக்கிற புஸ்தகங் களில் அவைக ளில்லாததால் அவைகளில்லையென மறுக்கிறார். சமஸ்கிருத பண்டிதர்களும் மகாவித்வான்களும் அவைகளை ஒத் துக்கொண்டிருக்கின்றனர். சில அச்சிடப்பட் டிருக்கின்றன. சில ஓலைப் புஸ்தகங்களி லிருக்கின்றன. இவருக்குத் தெரியாததால் அவைகளில்லையென மறுத்தல் விந்தையே. அச்சிடப்படாததால் அவைகளில்லையெனச் சொல்லுதல் அதனினும் விந்தையே. வளை யாபதி, குண்டலகேசி, மாறன் அலங்காரம் முதலியவைகள் அச் சிடப்படாமையால் அவைகளில்லையென இவர் மறுப்பார் போ லும். போப் பாதிரியார் நீதிநூற்றிரட்டில் அவருககு ருசியாத

சில பாட்டுகளை அச்சிடாமல்விட்டார். அப்பாடல்க ளில்லையென வே இவர் உரைப்பார்போலும். இவர் எழுதியுள்ளது யானை கண்ட குருடர் கதையை நன்கு விளக்குகிறது.

மேலும் "அங்காரக புண்ட்ரமாவது முகத்தினைக் கரிக்கோட்டினால் அலங்கரித்துக் கொள்ளுவது" என்று இச்சுவடியில் 7-வது பக்கத்தில் எழுதியிருக்கிறது. அங்கார புண்ட்ரமே ஒழிய அங்காரக புண்ட்ரம் என்பது சரியான வார்த்தையல்ல. அங்கார என்றால் கரி. அங்காரகம் என்றால் செவ்வாய். நாரதபரிவ்ராஜ கோபநிஷத்தில் 399-ம் பக்கத்தில் 8-வது வரியில் துரியாதீதனுகிய 5-வது சந்நியாசிக்குத் திலக புண்ட்ரம் விதித்திருக்கிறது. கஸ்தூரி, சாந்து அக்நி ஹோத்ரகரி இவைகளால் திலகமிட வேண்டியது. இதை இல்லையென்று சொல்லுவது ஆச்சரியம். மதமாச்சரியத்தால் ஒருவரை ஒருவர் இகழ்ந்து பேசுகிறதெல்லாம் ப்ரமாணத்தைச் சேராதென்பது அறிஞர் அறிந்த விஷயமே.

நாம் கண்ணால் காணக்கூடாதவர்களை அவரவர்கள் செய்த நூல்களில் கூறியுள்ள புண்ட்ரதாரிகளாகவே கொள்ளவேண்டியதே அறிவின்கட்பட்டதாகும். பாத்மோத்தர புராணத்தில் 31-வது அத்தியாயம் சிவன் தனக்கு மோக்ஷார்த்தமாக ஊர்த்வ புண்ட்ரமும் காலயவனன் முதலிய அசுரமோஹனார்த்தமாக திரியக் புண்ட்ரமும் தரித்ததாகச் சொல்லியிருக்கிறது. ப்ரமாண்ட புராணத்தில் வைஷ்ணவ ஸம்ஹிதையிலும் இப்படியே சொல்லியிருக்கிறது. "கிருஷ்ணமூர்த்தி விபூதி தரித்தா ரென்பது விஷ்ணு புராணத்திலும் பாரதத்திலும் காணலாம்" என்று இக்குட்டிச் சுவடியில் சொல்லியிருக்கிறது. நாம் பார்த்தவரையில் இப் புத்தகங்களில் இவைகளில்லை. ஊர்த்வபுண்ட்ரம் தரிக்கவேண்டுமென்று உபதேசித்த கிருஷ்ணன் பஸ்மம் தரித்துக்கொண்டான் என்பது பாஷாண்ட மதப்புத்தகங்களில் ஒருவேளை காணலாமே தவிர சத் சம்ப்ரதாய புஸ்தகங்களிலில்லை. பாரதத்தில் பீஷ்மபர்வத்தில் நான்காவதுநாள் யுத்தத்தில் வேதகுஹ்யத்திலும், பாரதத்தில் பீஷ்மவத பர்வத்தில் 66-வது அத்தியாயத்திலும், ஹரிவம்சத்தில் கைலாச யாத்திரைப் ப்ரகரணத்திலும், அதில் ஆச்சரிய பருவத்தில் சேஷதருமத்தில் 56-வது அத்தியாயத்திலும் சிவபிரானும் கிருஷ்ணமூர்த்தியும் பீஷ்மாசாரியரும் ஊர்த்வபுண்ட்ரம் சக்கராங்கனம் இவைகளைப்பற்றி விசதமாகச் சொல்லியிருக்கிறார்கள். பஸ்ம திரிபுண்ட்ராதிகளைப்பற்றி ஒரு எழுத்துக்கூட இவைகளில் கிடையாது. இவர்கள் ஊர்த்வ புண்ட்ரத்தை முக்கியமாகச்சொன்னபடியால் அதையே இவர்கள் தரித்ததாகக்கொள்ள வேண்டியதே விவேகத்தின்கட்படும்.

*பேசநின்ற சிவனுக்கும் பிரமன்றனக்கும் பிறர்க்கும்*
*நாயகனவனே கபால நன்மோக்கத்துக் கண்டுகொண்மின்*

என்றும்,

*மேவித்தொழும் பிரமன் சிவனிந்திரனாதிக்கெல்லாம்*
*நாவிக்கமல முதற்கிழங்கே உம்பரந்ததுவே.*

என்றும் இவைபோன்ற எண்ணிறந்த வாக்யங்களால் ஸ்ரீமந் நாராயணனுக்கே பரத்துவம் சொல்லுகிற ஆழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தங்களில் பஸ்மத்திற்கு ஆதாரமிருக்கிறதென்று சொல்வதைப் பாமரர்கூட ஒத்துக்கொள்ளார். இனி இவர் “அப்பாஞ்சராத்ரம் வேதத்திற்கு முரண்பட்டிருத்தலினால் அது பிரமாண நூலாகாதென இராமாநுஜர் ‘உத்பத்ய ஸம்பவாத்’ எனவுள்ள வியாஸ ஸூத்ரத்திற்கு எழுதிய பாஷியத்தில் எழுதியிருக்கிறார்” என்று 9, 10 பக்கங்களில் சொல்லுகிறார். இது உண்மையல்ல என்பது அந்த பாஷியத்தை வாசித்தவர்களுக்கெல்லாம் தெரியும். அதில் பாஞ்சராத்திரம் அப்பிரமாணம் என்கிறது பூர்வபக்ஷம் எனச் சொல்லி இரண்டு ஸூத்ரம் தள்ளி பாஞ்சராத்திரம் சர்வாம்சங்களிலும் ப்ரமாணதமமென்று சித்தாந்தம் செய்திருக்கிறார். வேதாந்த தீபம் என்கிற ஸூத்ரவியாக்யானத்திலும் இதைக் காணலாம். இச்சுவடியுடையார் பூர்வபக்ஷத்தை சித்தாந்தமாக மயங்கியுள்ளார். சுருதி ஸ்மிருதி புராணாகமங்களில் ஊர்த்வ புண்ட்ர ப்ரமாணங்கள் வியக்தமாயிருக்க, அது இராமாநுஜர் புதிதாகக் கற்பித்தது என்பது ப்ராமண விரோதம்.

ஆகவே இச்சுவடியில் எழுதியுள்ளவை ப்ரமாணங்களுக்கு விரோதமானவை. 1180 உபநிஷத்துகளிருக்க 108 என்று எழுதியிருக்கிறது. உத்தரபாகங்களை யில்லையென மறுத்திருக்கிறது. ஊர்த்வபுண்ட்ர திரியக்புண்ட்ரவகைகளைத் தப்பாகச் சொல்லியிருக்கிறது. இல்லாதவைகளை இருப்பனவாகவும் இருப்பனவற்றை இல்லையெனவும் சொல்லியிருக்கிறது. பூர்வபக்ஷத்தை சித்தாந்தமாகச் சொல்லியிருக்கிறது. வெற்றுரை விசேஷம். வீணான பரிகாசம் அதிகம். ஒருவரை ஒருவர் வைவது அறிவன் கட்படாது அகங்காரத்தைக் காட்டும். அது அழிவிற்கேது.

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||

இச்சுவடி 11-வது பக்கத்தில் ஒரு நாயுடு அவர்கள் வைஷ்ணவத்திலிருந்து சைவத்திற்குப்போய் விட்டதாகவும் அதனால் வைஷ்ணவத்தைத் தூஷித்திருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் அநேக சாணூர் கிறிஸ்தவர்களாகிவிட்டார்கள். ஆகையால் இந்து மதம் கிறிஸ்துமதத்திற்குக் கீழ்ப்பட்டது என்று சொல்லுவதை யொக்கும் இது. விஷயம் தெரிந்துகொள்ளாமல் ஒருமதத்தை விட்டு மற்றொருமதத்திற்கு ஒருவர்போனால் அது அம்மதத்திற்குக் குறைவாகாது. அறியாதார் குறையேயாகும்.

இச்சுவடி 11, 12-வது பக்கங்களில் தென்னேரி இராமசாமி முதலியாரவர்களின் ஆசாரியர் திருநாமத்திற்கு ஆதாரம் காட்டாமல் போனதாகச் சொல்லியிருக்கிறது. இச்சுவடியைப் பார்த்தவுடன் அந்த முதலியாரவர்களுக்கு அவர்களிடத்தில் பெருமை பேசினவர்களை வாதத்திற்கு வரும்படிசெய்ய நாம் எழுதினோம். அதற்குக்கக்ஷிக்காரர் வாதம்செய்யமுடியாது, பத்திரிகைகள்தான் எழுதுவோம் எனச் சொல்லிவிட்டதாகத் தெரிவித்திருக்கின்றனர். முற்காலங்களி லெல்லாம் வாதஞ் செய்ததாகவே ஏற்படுகிறது. ஏன் இப்பொழுது கூடாதோ தெரியவில்லை. புத்திமான்கள் இதனால் என்ன யூகிக்கலாமோ அதை யூகித்துக்கொள்ளுவாராக. வாதம் செய்து ஊர்த்வ புண்ட்ரத்தை நிலைநிறுத்த நாம் சித்தமாயிருக்கிறோம்.

இதுவரை இச்சிறு சுவடியிலுள்ளவற்றை ஆராய்ச்சிசெய்து கண்டித்தோம். இனிபுண்ட்ரவிஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லுகிறோம். விரிவாய்த் தெரிந்துகொள்ள விரும்புவோர் அதை நாம் அச்சிடப்போகும் "ஊர்த்வபுண்ட்ர நிர்ணயம்" என்னும் நூலில் தெரிந்துகொள்ளுவாராக. புண்ட்ரம் நான்குவிதம். ஊர்த்வபுண்ட்ரம், திரியக்புண்ட்ரம், வர்துலாகாரம், அர்த்த சந்த்ராகாரம். பட்டாகாரம் திலகத்துடன் சேர்ந்து ஆறு ஆகவும் சொல்லுவர். ஊர்த்வபுண்ட்ரம் என்பது நாசிகாமூலமுதல் கேச பரியந்தம் நெடுக்காக இரண்டு ரேகைகளாக மத்தியில் ஸ்ரீசூர்ணத்திற்கு இடைவிடம்விட்டு நெற்றியில் தரிக்கப்படுவது. நாலுவித புருஷார்த்தத்திற்கும் 4-விதமண்சொல்லி மோக்ஷத்தைவிரும்புகிறவன் வெள்ளைமண்ணினால்இப்புண்ட்ரம்தரிக்கும்படிசொல்லியிருக்கிறது. கோபிசந்தனம் என்கிறமண்ணும் மோக்ஷசாதனமே. திரியக்புண்டரமாவது அக்நிஹோத்ரபஸ்மத்தால் நெற்றியில் குறுக்காக மூன்று ரேகைகள் தரிப்பது. மண்ணினால் அல்லது சந்தனத்தால் பூர்ண சந்திரனைப்போலவும், அர்த்தசந்திரனைப்போலவும், சவுக்கமாகவும் பூசணிவிதைபோலவும் இடுபவைகள் மற்ற நான்கு புண்ட்ரங்கள்.

ஊர்த்வபுண்ட்ரம் ஊர்த்வலோகமாகிய வைகுண்டத்தைக் கொடுப்பது. இது விஷ்ணுபக்தர்களுக்கு முக்கியமானது. திரியக்புண்ட்ரமாவது குறுக்கே யிருக்கிற சிவலோகத்தை அடைவிப்பிக்கிறது. இது சிவபக்தர்களுக் குரித்தானது. மற்றநான்கும் அர்த்த காமங்களைக் கோரினவர்களுக்கு. வேதம் முதலாகிய சாஸ்திரங்கள் இவ்வாறு புண்ட்ரங்களையும் விதிக்கின்றன யஜுர்வேத நாரதீய உபநிஷத்தில் உத்தரபாகத்தில் பின்வருமாறு ஊர்த்வபுண்ட்ரத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறது.

நாஸாதிகேஶாந்தம் ஊர்த்வபுண்ட்ரம் விஷ்ணோஸ்திதஸ்ய சரணத்வயாக்ருதி। ஏகாங்குளம் பாததோர்மூலம் ததந்தர்வேஶாத்வே ஸோங்குளாதந்யூநக: ஸ ஸ்ரீ ப்ரதிஷ்டாமைபவதி ஸ்ரீ: ஹரித்ரா யதோ ஹரிம்த்ராவயதி தச்ஸ்ரீசூர்ணம்.

நாசாதிகே சாந்தம் ஊர்த்வ புண்ட்ரம் விஷ்ணோஸ்திதஸ்ய சரணத்வயாக்ருதி. ஏகாங்குளம் பாததரோரஸ்ய மூலம்ததுத்பன்னே த்வேசாகே மத்யாவகா சோங்குளாதந்யூநக: ஸ்ரீ ப்ரதிஷ்டாமைபவதி. ஸ்ரீ: ஹரித்ரா யதோ ஹரிம்த்ராவயதி தச்சிரீசூர்ணம்.

நாசிகாமூலமுதல் கேசம்வரை ஊர்த்வபுண்ட்ரம் விஷ்ணுவினுடைய இரண்டு திருவடிகளைப்போலே. புண்ட்ரமாகிற விருக்ஷத்திற்கு மூலம் 1-அங்குலம் அதை ஒட்டினுப்போல் மேல் நோக்கி இரண்டு கிளைகள் புறப்பட்டால்போ லிருக்கவேண்டும். மத்தியில் ஒருவிரற்கடை யிடமிருக்கவேண்டும். அது ஸ்ரீ சூர்ணமிட. ஸ்ரீ என்றால் ஹரித்ரை. ஹரித்ரையாவது பகவானுக்கு இஷ்டமானது அதன் பொடி ஸ்ரீ சூர்ணம். (ஹரித்ரா—மஞ்சள்).

இதுபோன்ற வாக்கியங்கள் அநேக பிரமாணங்களிலிருக்கின்றன. அவைகளை ஊர்த்வபுண்ட்ரநிர்ணயத்தில் பரக்கக்காணலாம், விரிவு பயத்தால் இங்கே சுருக்கியிருக்கிறது. சுபமஸ்து.